SUBORDINATE COURT, PADMANABHAPURAM
CASE NO.SC. 107/2018
Deposition of P.W.1

| | |
|---|---|
| Name | : ஸ்டாலின் |
| S/o.D/o.W/o. | : |
| Caste | : |
| Religion | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 of the day of
Dated: 29.11.2023
(Accused Absent 317 Crpc petition filed and allowed)

<u>அ.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

என்னிடம் காட்டப்படும் வெட்டுகத்தி தான் வழக்கு சம்பவத்தின் போது எதிரி என்னை வெட்ட பயன்படுத்தியதாகும். மேற்படி வெட்டுகத்தி சா.பொ.1 என்னிடம் காட்டப்படும் 100 ரூபாய் நோட்டுக்கள் எண்ணம் 2 வழக்கு சம்பவத்தின் போது எதிரி எனது சட்டை பை பாக்கட்டில் இருந்து எடுத்த பணமாகும். மேற்படி 100 ரூபாய் நோட்டுகள் எண்ணம் 2 சா.பொ.2 வரிசை. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

100 ரூபாய் நோட்டுகளை எதிரியிடம் இருந்து திருப்பி வாங்க நான் முயற்சி செய்யவில்லை. மேற்படி இரண்டு 100 ரூபாய் நோட்டுகளில் உள்ள எண்கள் எனக்கு தெரியாது. இன்று நீதிமன்றத்தில் என்னிடம் இரண்டு 100 ரூபாய் நோட்டுக்கள் காண்பிக்கப்பட்டது. 100 ரூபாய் நோட்டுக்கள் அனைத்தும் ஒன்றாக தான் இருக்கும். வெட்டுகத்தி சுமார் 2 அடி நீளம் இருக்கும். மேற்படி வெட்டுகத்தியின் வெட்டும் பகுதி கூர்மையாக இருந்தது. எதிரி என்னை ஓங்கி தான் வெட்டினார். அதனால் எனது இடது கையில் பட்டு இரத்த காயம் ஏற்பட்டது. எனது கையில் இருந்து இரத்தம் எனது சட்டையிலும் நான் அணிந்திருந்த ஜீன்ஸ் பேண்டிலும் தலையிலும் பட்டது. அரசு மருத்துவமனையில் என்னை யார் வெட்டினார் என்று நான் மருத்துவரிடம் கூறினேன். மருத்துவமனையில் என்னை உள்நோயளியாக சிகிச்சை பெறுமாறு கூறினார்கள். ஆனால் நான் உள்நோயளியாக சிகிச்சை பெறாமல்

வெளிநோயளியாக மட்டுமே சிகிச்சை பெற்றேன். வெட்டுகத்தி என்பது நீளம் குறைவாகவும் நல்ல அகலமாகவும் இருக்கும் வெட்டரிவாள் என்பது நீளம் அதிகமாகவும் அகலம் குறைவாகவும் இருக்கும். நெல்லுகுத்தி பாறை என்ற இடத்தின் அருகே நான் நடந்து சென்று கொண்டிருந்தேன் அப்போது எதிரி நடந்து வந்தார். நான் மேற்படி இடத்திற்கு வருவது எதிரிக்கு முன்பே தெரியாது. எதிரி தற்செயலாக தான் மேற்படி இடத்திற்கு வந்தார். எனது ஊர் கஞ்சிக்குழி எதிரியின் ஊர் கருக்கி காட்டுவிளை. மேற்படி இரண்டு ஊரும் பக்கத்தில் உள்ள ஊர்கள் ஆகும். எதிரி எனக்கு உறவினர் கிடையாது. 2010–ஆம் வருடம் நானும் எதிரியும் கிரிக்கட் விளையாடியுள்ளோம். நான் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் எதிரியின் மீது தொடர்ச்சியாக பொய் புகார் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது தங்கை எதிரியின் மீது ஏற்கனவே தக்கலை காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது பதிவு செய்யப்பட்ட அமர்வு வழக்கு எண்.73/2012–ல் மாவட்ட மகளிர் நீதிமன்றம் நாகர்கோவில் கடந்த 2015–ஆம் வருடம் எதிரிக்கு 10 வருடம் கடுங்காவல் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. மேற்படி வழக்கில் நான் அரசு தரப்பு 2–வது சாட் சியாவேன். மேற்படி தண்டனை தீர்ப்பை எதிர்த்து எதிரி மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமனறம் மதுரை கிளையில் மேல்மூறையீடு தாக்கல் செய்திருந்தார். மேற்படி மேல்மூறையீட்டில் கடந்த 16.10.2019 அன்று விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தண்டனை தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு எதிரி விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் என்னிடம் காட்டப்படும் தீர்ப்பின் நகல் தான் மேற்படி விடுதலை தீர்ப்பு நகல் என்று சொன்னால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் இணையவழி நகல் எதிரி தரப்பு சான்றாவணம் 1. எதிரியின் மீதான முன் வழக்கின் அடிப்படையில் நான் எதிரியின் மீது கொடுத்த பொய் புகார் தான் இவ்வழக்கு என்றால் சரியல்ல. சா.பொ.1 வெட்டுகத்தியால் எதிரி என்னை வெட்டியதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் ரத்தம் தரையில் கிடந்தது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. காவல் உதவி ஆய்வாளரிடம் நான் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக எதிரியின் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னை வெட்டி விட்டு எதிரி வெட்டுகத்தியை உயர்த்தி காண்பித்தார் என்பதும் அங்கு உள்ளவர்கள் அதை கண்டு பயந்து ஓடினார்கள் என்பதும் பொய் என்றால் சரியல்ல. எதிரி எனது சட்டை பையில் இருந்து பணம் எடுத்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. இவ்வழக்கு பொய் வழக்கு என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.